செ. கு. எண்: 152 நாள்: 19.06.2013

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 19.6.2013

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம், வள்ளநாடு கிராமம், அறந்தாங்கி - புதுக்கோட்டை பிரதான சாலையில் 19.6.2013 அன்று பால் கேன்களுடன் பள்ளி குழந்தைகளையும் ஏற்றி சென்ற வாகனம் மீது தனியார் பேருந்து மோதியதில், ஆலங்குடி வட்டம், விஜயரகுநாதபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. மூக்கையா என்பவரின் மகன் அருள், திரு. ரமேஷ் என்பவரின் மகள் சத்யா, திரு. ராஜகோபால் என்பவரின் மகன் நாராயணன், திரு. சுந்தரம் என்பவரின் மகன் மதியழகன், திரு. அண்ணாமலை என்பவரின் மகன் விஷ்ணு, திரு. முத்தையா என்பவரின் மகன் மணிகண்டன், திரு. சுப்பிரமணியன் என்பவரின் மகன் சிவா ஆகிய ஏழு பள்ளி மாணாக்கர்கள் மற்றும் ஆலங்குடி வட்டம், வேங்கடகுளம், மதவள்ளிக்காடு கிராமத்தைச் சேர்ந்த வாகன ஓட்டுநர் ஆறுமுகம் ஆகியோர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த சாலை விபத்தில் அகால மரணமடைந்த ஏழு பள்ளி மாணாக்கர்கள் மற்றும் வாகன ஓட்டுநரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சாலை விபத்தில் மூன்று மாணவர்கள் காயமடைந்துள்ளனர் என்பதை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் இவர்களுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்க மருத்துவமனை அதிகாரிகளுக்கும், புதுக்கோட்டை மாவட்ட நிருவாகத்திற்கும் நான் உத்தரவிட்டுள்ளேன். காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வரும் இவர்கள் விரைவில் பூரண குணமடைந்து வீடு திரும்ப வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயர சம்பவத்தில் உயிரிழந்த ஏழு பள்ளி மாணாக்கர்கள் மற்றும் வாகன ஓட்டுநரின் குடும்பங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா 25,000/- ரூபாயும், சாதாரண காயமடைந்தவர்களுக்கு தலா 10,000/- ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9**